This question paper contains 5 printed pages]

*Your Roll No.*................

**3678**

**B.A. (PROGRAMME)/I** **JS**

TAMIL LANGUAGE (A)—Paper I

*Time : 3 Hours* *Maximum Marks :* 100

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

*Note :* The maximum marks printed on the question paper are applicable for the students of the SOL/NCWEB/Non-Formal cell. These marks will, however be scaled down proportionately in respect of the students of Regular Colleges at the time of posting of awards for compilation of result.

1 கடிதத்தின் உறுப்புகளைச் சான்றுகளுடன் விளக்குக. 20

**அல்லது**

உமது குடியிருப்புப் பகுதிக்குப் போக்குவரத்து வசதி செய்து தரக் கோரி சம்மந் தப்பட்ட அதிகாரிக்குக் கடிதம் வரைக.

2 வளமைத் தொடருக்கும் மரபுத் தொடருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்துக. 5

P.T.O.

**அல்லது**

அடுக்குச் சொல் தொடர் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

3 துறைமொழிச் சொற்களின் வகைகளை விவரிக்க. 5

**அல்லது**

தமிழில் வேர்ச்சொல் வளம் குறித்து விளக்குக.

4 பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து அதனடிப்படையில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சுருக்கமான விடை தருக. 20

நம் நாட்டுக் கோயில்கள் நமது பண்பாட்டின் நிலைக்களனாகவும், பொதுமை நலம் பேணும் நிறுவனங்களாகவும் திகழ்ந்தன. நமது மன்னர்கள் தமக்கெனப் பெரிய மாள்கைகள் கட்டுவதை விட இறைவனுக்குப் பெரிய கோயில்

எழுப்புவதே சாலச் சிறந்தது என மதித்தனர். விலையுயர்ந்த மணிகள், நகைகள் இறைவனுக்குக சமர்ப்பிக்கப்பட்டன. விலைமதிக்க முடியாத கலைச் சிற்பங்களைக் கோயில்களில் உருவாக்கினர். தத்துவ ஞானத்தை உணர்த்தும் விரிவுரைகள் நிகழ்த்துவதற்காக பெரிய பெரிய மண்டபங்கள் எழுப்பப்பட்டன. பல்வேறு மக்கள் ஒருங்கே கூடி கருத்துப் பரிமாற்றங்களைச் செய்யும் நிலையங்களாகத் திகழ்ந்தன. வெள்ளப் பெருக்கு, கடும் வறட்சி, பஞ்சம் முதலிய இயற்கையின் சீற்றங்களில் இருந்து சமுதாயத்தைப் பாதுகாக்கும் உறைவிடமாகவும், ஏழை எள்யவர்கட்டு உண்டி தந்து காப்பாற்றும் அன்ன தானமாகவும், மருத்துவ நிலையமாகவும்,

மாண்புறு கலைக் கூடங்களாகவும் திகழ்ந்தன. பௌத்தவிகாரங்கள், சமணப் பள்ளிகள் போலவே, இந்துமதக் கோயில்கள் தமது மதக் கருத்துக்களைப் பரப்பவும், பேணவும் ஏற்பட்ட நிலையங்களாகத் திகழ்ந்தன.

**கேள்விகள் :**

(*i*) கோயில்கள் எதற்காக நிறுவப்பட்டன?

(*ii*) மண்டபங்கள் எதற்காக எழுப்பப்பட்டன?

(*iii*) மன்னர்களுக்கும் கோயில்களுக்கும் உள்ள தொடர்பு யாது?

(*iv*) கோயில்கள் எதற்காகப் பயன்பட்டன?

(*v*) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதி இப்பத்தி கூறு முக்கிய கருத்துக்களை எழுதுக.

5 (அ) எவையேனும் **இரண்டனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக. 2×20=40

(*i*) அம்மானைப் பாடல்கள்.

(*ii*) தமிழர் பண்பாடு.

(*iii*) இந்தியாவுக்கு வெளியே தமிழர் செல்வாக்கு.

(*iv*) அல்லியரசாணிக் காப்பியங்கள்.

(ஆ) எவையேனும் **இரண்டனுக்குச்** சிறு குறிப்பு வரைக. 2×5=10

(*i*) மொழி தோன்று மிடத்தின் சின்றியமையாமை.

(*ii*) தமிழர் திருநாள்.

(*iii*) அவிரோதம்.

(*iv*) நடோபி ஞானிகள்.